| | |
|---|---|
| **அனுப்புநர்** | **பெறுநர்** |
| சா. சேதுராமவர்மா, | அனைத்து முதன்மைக் கல்வி |
| அரசுத் தேர்வுகள் இயக்குநர், | அலுவலர்கள் |
| சென்னை – 600 006. | |

**ந.க.எண். 020846 /எப்1/2022** **நாள். 02.01.2023**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள் :** அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6 - மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு, மார்ச்/ஏப்ரல் 2023 – பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் மேற்கொள்ளுதல் - அறிவுரை வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை :** அரசுத் தேர்வுகள் இயக்குநரின் இதே எண்ணிட்ட கடிதம், நாள்.24.01.2023

------

பார்வையில் காணும் இவ்வலுவலக கடிதத்தில், அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் 24.01.2023 **பிற்பகல் முதல் பிப்ரவரி முதல் வாரம் வரையிலான நாட்களில்** www.dge1.tn.gov.in என்ற இணையதள முகவரிக்கு சென்று தங்கள் பள்ளிக்கு அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் வழங்கப்பட்டுள்ள USER ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி, மார்ச்/ஏப்ரல் 2023 மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்விற்கான தங்கள் பள்ளி மாணாக்கர்களின் தேர்வெண்ணுடன் கூடிய பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறும் அவ்வாறு, பதிவிறக்கம் செய்யப்படும் பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் இருப்பின் அத்திருத்தங்களை மேற்கொள்ள பின்னர் வாய்ப்பு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

தற்போது, முதன்மைக் கல்வி அலுவலர்கள் தங்களது ஆளுகைக்குட்பட்ட அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கும், பின்வரும் அறிவுரைகளைப் பின்பற்றி மார்ச்/ஏப்ரல் 2023 மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்விற்கான பெயர்ப்பட்டியலில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு உரிய அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

1. மார்ச்/ஏப்ரல் 2023 மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்விற்கான தங்கள் பள்ளி மாணாக்கர்களின் தேர்வெண்ணுடன் கூடிய பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் இருப்பின், **03 .02.2023 முதல் 10.02..2023 வரையிலான நாட்களில்** பள்ளித் தலைமையாசிரியர்கள் EMIS PORTAL- லில் Nominal Roll பகுதிக்குச் சென்று அத்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

2. அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் அறிவிக்கப்படும் நாட்களில் EMIS PORTAL-லில் மேற்கொண்ட திருத்தங்கள் மட்டுமே DGE PORTAL-லில் Update செய்ய இயலும் என்பதால், அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களும் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி திருத்தங்கள் மேற்கொள்ள அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. **மாணாக்கரின் அனைத்து வகையான திருத்தங்களும் EMIS PORTAL –லில் மட்டுமே பதிவேற்றம் செய்ய வேண்டும்.**

4. மேற்குறிப்பிட்ட நாட்களில் EMIS PORTAL-லில் மேற்கொண்ட திருத்தங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டு, DGE PORTAL-லில் பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்து கொள்ள பின்னர் வாய்ப்பு வழங்கப்படும்.

**ஒம்/-**

**இயக்குநர்**

<u>நகல்:</u>

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்